அ.வ.எண்.10/2019
பெயர்- ராமசாமி (பி.சா.1)

நாள்- 16.03.2020

வாதி தரப்பில் கு.வி

என் தகப்பனார் பெயர் சாமிநாயக்கர் தாயார் பெயர் சுப்பம்மாள். சாமிநாயக்கர் சுப்பம்மாள் தம்பதியருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. சாமிநாயக்கர் 1996ல் இறந்துவிட்டார். என் அப்பா இறந்த ஒருவருடத்தில் என் அம்மாவும் இறந்துவிட்டார். என் அப்பா உயிருடன் இருக்கும்போது என் அப்பா நாங்கள் மற்றும் வாதிகள் சேர்ந்துதான் அனுபவம் செய்துவந்தோம் என்றால் சரிதான். என் பெற்றோர்கள் இறந்தபின்பு தாவா சொத்தில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு சமபாக உரிமை உண்டு என்று சொன்னால் என் அப்பா உயிருடன் இருக்கும்போதே சொத்தை பிரித்து கொடுத்துவிட்டார். என் அப்பா உயிருடன் இருக்கும்போது எந்தெந்த சொத்து எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் பிரித்து கொடுத்தார் என்று கேட்டால் சர்வே எண் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. என் அப்பா உயிருடன் இருக்கும்போது யாருக்கும் சொத்து சம்பந்தமாக ஆவணம் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பட்டா ஆதியில் யார் பெயரில் பட்டா இருந்தது என்று கேட்டால் யார் பெயரில் பட்டா இருந்தது என்று எனக்கு தெரியாது. என் சகோதரர் பெயருக்கு எந்த வருடம் எந்த உத்தரவின்பேரில் பட்டா மாறுதல் ஆனது என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண் எனக்கு தெரியாது. பட்டா எண்.424 கந்தசாமி பெயருக்கு வா.சா.ஆ.3ன் படி இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தில் தோட்டம் பயிர் செய்யபட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் கிணறு உள்ளது. தாவா சொத்தின் பழைய சர்வே எண்.36 என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள கிணற்றின் உரிமை சர்வே எண்.36 கண்ட சொத்துகள் அனைத்திற்கும் உரிமை உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டுமென்று மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். இலவச மின்சாரம் என் அப்பா இறந்தபின்பு என் அப்பா பெயருக்கு கிடைத்தது என்றால் சரிதான். என் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போதே பிள்ளைகள் அனைவருக்கும்

திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என் மனைவி பிள்ளைகள் திருச்சியில் உள்ளனர். 1ம் பிரதிவாதியின் மனைவி பிள்ளைகள் உப்பத்தூரில் குடியிருந்து வருகிறார்கள் பிள்ளைகள் வெளியூரில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் என் பெற்றோர்கள் இறந்தபின்பு நானும் என் சகோதர சகோதரிகளுடன் கூட்டு அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் நானும் என் சகோதரனும் மட்டும் தான் அனுபவித்து வருகிறோம். எனக்கு தாவா சொத்தில் பங்கு இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண அபிடவிட்டில் என் அப்பாவிற்கு பூர்விக சொத்துகளையும் கிரையம் வாங்கிய சொத்துகளையும் வாய்மொழிபாகம் செய்துகொண்டோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விபரத்தை நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வாய்மொழிபாகம் எந்த மாதம் எந்த தேதி எந்த வருடம் நடந்தது என்று நிருபணஅபிடவிட்டில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு தெரியாது. வாய்மொழிபாகத்தின் போது என் சகோதரிகளுக்கும் பாகம் பிரித்து கொடுக்கபட்டது என்று சொன்னால் எனக்கும் என் சகோதரர்களுக்கும் மட்டும் தான் பாகம் பிரித்து கொடுக்கபட்டது- என்னென்ன சொத்துகள் யார்யார் பாகத்திற்கு ஒதுக்கி கொடுக்கபட்டது என்ற விபரம் எதிர்வழக்குரையில் குறிப்பிடபடவில்லை. பாகம்பிரித்தவுடன் சொத்திற்கு பட்டா பெற்றோமா என்று கேட்டால் எனக்கு தெரியாது ஆனால் கிரையம் கொடுத்துவிட்டோம். கிரையம் கொடுத்தபோது யார் பெயருக்கு பட்டா இருந்தது என்று காட்டுவதற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை. மற்ற சகோதரர்களுக்கு என்னென்ன சொத்துகள் கொடுக்கபட்டது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெண்மக்களுக்கு சொத்திற்கு ஈடாக நகை போடபட்டது. பெண்மக்களுக்கு எவ்வளவு நகை போடபட்டது என்ற விபரம் இந்த வழக்கில் நாங்கள் கூறவில்லை என்றால் சரிதான். எங்கள் சமூகத்தில் திருமண செலவை மணமகன் வீட்டில் தான் செய்வார்கள் என்றால் சரிதான். நிருபண அபிடவிட்டில் பெண் மக்களுக்கு நகை சீர் சீராட்டு கொடுக்கபட்டு திருமணம் முடித்து வைத்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் என் சகோதரர்களுக்கும் பணம் செலவு செய்து திருமணம் நடத்தி வைத்தார்கள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு எந்த சர்வே எண் சொத்தில் சொத்து கொடுக்கபட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. 1ம் வாதிக்கு எந்த சொத்து கொடுக்கபட்டது என்று யாருக்கு

தெரியும் என்று கேட்டால் பெரியவர்களுக்கு தெரியும் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. வாய்மொழிவிடுதலை மூலம் சொத்தை கொடுத்தது சம்பந்தமாக பெரியவர்கள் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு நேரடியாகவும் தெரியாது. வாய்மொழிபாகம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாய்மொழிவிடுதலை எப்போது யாருக்கு கொடுக்கபட்டது என்ற விபரமும் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 முதல் 3 தீர்வை ரசிதுகளில் கண்ட பட்டாக்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பட்டா எண்.145, 278, 93 ஆகியவை எந்த காலத்திலும் என் அப்பா சாமிநாயக்கர் பெயரில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. பட்டா எண்.145 வீரப்பநாயக்கர் மகன் சங்கவநாயக்கர் பெயரில் இருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பட்டா எண்.278 வெங்கடசாமி நாயக்கர் மகன் நாரணப்பநாயக்கர் பெயரில் இருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதி தரப்பில் சொத்துகளுக்கு தீர்வை செலுத்தி ரசிதுகள் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். மின்இணைப்பிற்கான வரி ரசிதுகளும் வாதி தரப்பில் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். சாமிநாயக்கருக்கு தாவா சொத்து தவிர வேறு சொத்துகள் கிடையாது என்றும், தாவா சொத்தை நானும் என் சகோதர சகோதரிகளுடன் கூட்டு அனுபவமாக அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தரப்பில் சொத்தை பிரித்து தரவேண்டும் என்று அறிவிப்பு அனுப்பினார்கள். அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் தற்போது வழக்கிற்காக சொல்லபட்டுள்ள சங்கதிகள் என்றால் சரியல்ல. பெண்மக்களுக்கு நகை போட்டதும், வாய்மொழியாக சொத்து பிரிக்கபட்டிருந்தால் நாங்கள் பதில் அறிவிப்புஅனுப்பியிருப்போம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு தலா 1/5 பாகம் கிடைக்ககூடியது என்றும் அதை நான் பிரித்து கொடுக்க கடமைபட்டவன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு என் தகப்பனாருக்கு பாத்தியபட்ட சொத்துகள் விபரம் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.